இணைப்பு

[6ம் பக்கத்தில் 356ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1—4—1974—லிருந்து 30—9—1974 வரையிலான செலவு குறித்து விவரங்கள்.

நாள். (1)	தொகை வழங்கப்பட்டவரின் பெயர். (2)	தொகை. (3) ரூ.
8—4—1974	தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி வட்டம் பழைய பாளையத்தைச் சேர்ந்த மகாலிங்கத்தின் மனைவிக்கு வழங்கப்பட்டது. மேற்படி மகாலிங்கம் வேளாண்மை நிலத்திற்கு பூச்சி கொல்லி மருந்து (போலிடால்) தெளித்தபோது இறந்தார்.	1,000·00
17—4—1974	தருமபுரி நகரத்தில் 1—5—1973 அன்று மின்சாரம் பாய்ந்ததனால் இறந்த திரு. ராஜாமணியின் குடும்பத் தலைவரும் தந்தையுமாகிய திரு. போத்தன் என்பவருக்கு வழங்கப்பட்டது.	1,000·00
17—4—1974	செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், எராவானூர் கிராமத்தில் 10—5—1973 அன்று நடந்த தீ விபத்தில் உயிரிழந்த 69 பேரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 வீதம் தொகை வழங்கியது.	1,725·00
24—4—1974	நடுவட்டம், டெர்ரஸ் எஸ்டேட் பணியாளர்களுக்கு, அந்த எஸ்டேட் மேலாளர் தலைமறைவாகிவிட்டதால் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்ட துயர் தணிப்புத் தொகை.	5,000·00

25—4—1974	.. ..	குடியாத்தத்தில் 10—3—1974 அன்று நடந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்குத் துயர் தனிப்புத் தொகை.	1,001·00
25—4—1974	.. ..	1—7—1970 அன்று படைக்கலந்தாங்கிய முதற் பிரிவினருக்குக் கட்டில் விளக்கம் செய்து கொண்டிருந்தபோது, சுரங்கம் வெடித்ததின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் இரு கண்களையும் இரு கைகளையும் இழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவருக்கு வழங்கப்பட்ட தொகை.	2,000·00
27—4—1974	.. ..	23—4—1974 அன்று பசலுணவு உட்கொண்ட பிறகு இரு சிறுவர்கள் மாண்டனர். ஒருவனது பெயர் பெருமாள். அவனுக்கு வயது 6. அவன் பழனிசாமி கவுண்டரது மகன் ஆவான். மற்றொரு சிறுவனின் பெயர் பி. பிரகாஷ். அவனுடைய வயது 9. அவன் பழனிசாமி எகாலி என்பவர் மகன் ஆவான். இவ்விரு சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தொகை வழங்கப்பட்டது. மதுரை மாவட்டம் திண்டுக்கல் வட்டம், செட்டியார்பட்டியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 என்ற வீதத்தில் இரு குடும்பங்களுக்கும் தொகை அனுப்பப்பட்டது.	4,000·00
27—4—1974	.. ..	மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கு அருகில் அண்மையில் பெய்த (ஏப்ரல் 1974) மழையின் காரணமாக மாணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்ட தொகை.	30,000·00
8—5—1974	.. ..	சென்னை சிரணிபுரத்தின் 27—11—1973-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தில் தீ அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது தனது வலது கால் எலும்பு முறிந்துவிட்ட திரு. மணி அவர்களின் மனைவி திருமதி. தனலட்சுமிக்கு வழங்கிய தொகை.	250·00